<6magic1><Fine Arts><Hobbies><1985><Book><மாஜிக் தந்திரங்கள்><எம். எம். அலெக்ஸாண்டர்><34><

-42-

காட்சி நடத்துகிறவர் ஒரு புதிய ரூபாய் நோட்டை பாக்கெட்டில் வைத்துக் கொண்டு மந்திரக் கோலுடன் மேடைக்கு வரவேண்டும். பிறகு மேஜையின் மேல் இருக்கும் தீப்பெட்டியை எடுத்து, கொளுத்தி வரிசையாக
உள்ள மெழுகு திரிகள் எல்லாவற்றையும் ஏற்றி விட வேண்டும். பிறகு மந்திர பெட்டியை எடுத்து திறந்து எல்லோருக்கும் காண்பித்து விட்டு சபையிலுள்ள ஒருவரிடம்
-43-
ஒரு ரூபாய் நோட்டைக் கொடுத்து அதை பெட்டியில் வைக்குமாறு கேட்க வேண்டும். அவர் பெட்டியில் நோட்டை வைத்தவுடன் அதை மூடி மேடைக்கு கொண்டு வந்து ஸ்டூலின் மேல் வைத்துவிட்டு,
சபையில் முன் வரிசையில் ஒருவரிடம் "சார், இந்த மெழுகு
திரிகளில் எத்தனையாவது திரியை நீங்கள் எடுக்க சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டால் எதையாவது ஒன்றைக்
குறிப்பிடுவார். உடனே அந்தத் திரியை எடுத்து அணைத்து
சபையோருக்கு எதிரில் ஒரு ஸ்டூலின் மேல் வைத்துவிட

வேண்டும். மற்ற திரிகளை அணைத்து அந்தப் பலகையை
மேடையின் ஓரத்தில் வைத்து விடவேண்டும்.
இரண்டு ஸ்டூல்களில் ஒன்றின் மேல் மெழுகு திரியை நிற்க வைத்து அதை ஏற்றி எரியும்படிச் செய்து விட்டு,
மந்திரப் பெட்டியை எடுத்து அதில் ஒரு ரூபாய் நோட்டு
இருப்பதைக் காண்பித்து விட்டு அந்தப் பெட்டியை மேல்
கீழாக மாற்றி வைத்து விடவேண்டும். (இந்த சமயம் பெட்டியினுள் தடைப் பலகை நோட்டின் மேல் விழுந்து
அதை மறைத்துக் கொள்ளும்.) இதன் மேல் கறுப்புக் கைக்குட்டையை மூடி மந்திரக் கோலினால் மந்திரம் போடுவது
போல செய்து பெட்டியிலுள்ள நோட்டை மெழுகுதிரிக்குப்
போகச் சொல்வது போல நடித்து, மூடிய கைக்குட்டையை
எடுத்து விட்டு, மந்திரப் பெட்டியைத் திறந்து சபையோரிடம்
காண்பித்து "பெட்டியில் வைக்கப்பட்ட நோட்டு அதிலில்லை. அது மெழுகு திரிக்குள் போய் விட்டது"
என்று கூறி, எரியும் திரியை அணைத்து அதை எடுத்து
இரண்டாக உடைத்தால் உள்ளே நோட்டுச் சுருள்

இருக்கும்.
அதை எடுத்துப் பிரித்துக் காண்பிக்க சபையோர் ஆச்சரியப்படுவார்கள்.

குறிப்பு : வரிசையாக வைக்கப்பட்ட மெழுகு திரியில் ஒன்று எடுக்கும் பொழுது எச்சரிக்கையாக எடுக்க



வேண்டும். சில சமயம் துளையை அடைத்த பகுதி பலகையில் ஒட்டிக் கொண்டு நோட்டை வெளியே இழுத்து
விடும். கவனமாக எடுக்க வேண்டும். மந்திரப் பெட்டியில்
ஒன்றுமில்லை என்பதை சபையோருக்குக் காண்பிக்கும்
பொழுது ஆள்காட்டி விரலை பெட்டியின் உள்பக்கமாக
வைத்து, தடைப்பலகை கீழே விழுந்து விடாமல் பிடித்துக்
கொள்ள வேண்டும்.

வெறும் பெட்டியில்
முயல் குட்டி வரவழைத்தல்

இந்தக் காட்சியைச் செய்வதற்கு சொருகு "டிராயர்" வைத்த ஒரு பெட்டி செய்யவேண்டும். இது சுமார் 28 செ. மீ.
நீளமும், சுமார் 18 செ. மீ. அகலமும், சுமார் 8 செ. மீ. உயரமும் உள்ள 1 செ. மீ. கனமுள்ள பலகையில் செய்யப்
படவேண்டும். இந்த விதமான ஒரு பெட்டி தயாரித்து அதன்

ஒரு வாயை மட்டும் அடைத்து விட வேண்டும். ஒரு பக்க
வாயின் வழியே ஒரு சொருகு டிராயர் தயாரிக்க வேண்டும்.
இந்த டிராயரை பெட்டியில் சரளமாக செலுத்தவும், இழுக்கவும் கூடியதாக இருக்க வேண்டும். இந்த டிராயரும் பெட்டி
செய்யப்பட்ட பலகையின் கனமே இருக்க வேண்டும். டிராயரை இழுக்க முன் பக்க பலகையில் ஒரு வளையம்
இணைத்து விட வேண்டும்.

ஆனால், இந்த டிராயரில் ஒரு சூட்சுமம் செய்ய வேண்டும். அதாவது இந்த டிராயரில் பின் குறுக்குச் சட்டம் இரண்டு துண்டுகளாக இருக்க வேண்டும். அதே
நேரத்தில் இரண்டு துண்டுகளும் பின்னோக்கித் திறக்கவும் வேண்டும். உள் பக்கமாகத் திறக்கவும் வேண்டும்.
உள்ளே ஒரு பொருளைப் போட்டு, பெட்டியின் முன் பகுதியை மேல் நோக்கி வைத்து டிராயரை வெளியே இழுத்தால் உள்ளே உள்ள பொருள் கதவைத் திறந்து



கொண்டு கீழே இறங்கி விடவேண்டும். டிராயர் காலியாக
இருக்க வேண்டும். பிறகு டிராயரை பெட்டியினுள் தள்ளினால் அந்தப் பொருள் டிராயரில் வந்துவிட வேண்டும். இந்த வகைக்கு பயன்படக் கூடிய ஒரு சூட்சுமப் பெட்டியை செய்ய கைதேர்ந்த

சூட்சுமபுத்தியுள்ள
ஒரு தச்சுத் தொழிலாளியிடம் சொன்னால் அவர்
செய்து
தருவார்.
 இந்தப் பெட்டியை வைத்துக் கொண்டு பலவிதமான
காட்சிகளை நடத்தலாம். இதற்கு ஒரு சிறிய
வெண்ணிறமான முயல் குட்டியை வாங்க வேண்டும்.
காட்சி
தொடங்குமுன் இந்தச் சூட்சுமப் பெட்டியில் அந்த
முயல்
குட்டியைப்
போட்டு மூடி ஸ்டூலின் மேல் வைத்து விடவேண்டும்.
 காட்சி ஆரம்பிக்கும் சமயம் காட்சியை
நடத்துகிறவர்
அந்தப் பெட்டியை எடுத்து பின்பகுதியை இடது
கையினால்
சாய்வாகப் பிடித்துக் கொண்டு, டிராயரை வெளியே
இழுத்து அதில் ஒன்றுமில்லை என்பதை
சபையோரிடம்
காண்பித்து விட்டு மறுபடி அதை மெதுவாக மூடி
ஸ்டூலின்
மேல் வைத்து விட்டு மேலே கறுப்புக்
கைக்குட்டையை
விரித்து மூடிவிட்டு, மந்திரக் கோலை உயர்த்தி
எதையோ
மேலேயிருந்து வரவழைப்பது போல பாவனை
செய்து
விட்டு, கருப்புக் கைக்குட்டையை எடுத்து விட்டு

பெட்டியை
எடுத்து அதன் முன் பகுதி முன் பக்கமாக சாய்வாக இருக்கும்படி வைத்து, சபையோருக்கு முன் டிராயரை வெளியே இழுத்தால் அதில் முயல் குட்டி
வந்திருப்பதை
சபையோருக்குக் காண்பித்து முயல் குட்டியை
எடுத்து
வெளியே விட்டால் அது துள்ளிக் குதித்து ஓடுவதை சபையோர் கண்டு ஆச்சரியப்படுவார்கள். பிறகு
பெட்டியை
மூடி ஸ்டூலின் மேல் வைத்து விடவேண்டும்.

-46-

கவனிப்பு : சூட்சுமப் பெட்டிக்குள் முயல் குட்டியை போட்டு மூடாமல் பெட்டியை மட்டும் ஸ்டூலின் மேல் வைத்துவிடக் கூடாது. பெட்டியை வெறும் பெட்டி
என்று
சபையோருக்குக் காண்பிக்கும் பொழுது பெட்டியின் பின் பகுதியை பின்பக்கமாக சாய்த்துப் பிடிக்க
மறந்து
விடக் கூடாது. அதே போல முயல் குட்டியை
வெளியே
எடுக்க முயற்சிக்கும் பொழுது பெட்டியை முன்பக்கம் சாய்ந்த நிலையில் பிடிக்கவும் மறந்துவிடக் கூடாது.

கண்ணாடி டம்ளரில்
இருக்கும் சர்பத்
வேறு டம்ளருக்கு
மாறுதல்

ஹார்லிக்ஸ் பாட்டில் மாஜிக் செய்வதற்கு

பயன்படுத்திய அதே இரண்டு டம்ளர்களையே
இந்தக் காட்சிக்கும்
பயன்படுத்தலாம். ஆனால் இரண்டு தகரக்
குழாய்களை
தனிப்பட்ட முறையில் தயாரிக்க வேண்டும்.
சுமார் 12செ. மீ உயரம் சுமார் 7 செ. மீ.
குறுக்களவுள்ள இரண்டு தகரக் குழாய்கள் தயாரிக்க வேண்டும். இந்தத் தகரக் குழாய்களின் உள்ளே சற்று பிடிப்பாக இறங்கக் கூடிய வாய் அகன்று அடி சிறுத்த அளவில் இரண்டு "புனல்" அதாவது எண்ணெய்
ஊற்ற
பயன்படும் புனல் போல இரண்டு தயாரிக்க
வேண்டும்.
ஒரு புனலின் அடிப்பக்கம் சுமார் ஒரு செ. மீ
அகலத்தில்
துளை செய்து விடவேண்டும். மற்றொரு புனலின் கூர்பாகத்தில் சிறு துளையிட்டு, அந்தத் துளையில்
மூன்று
மி. மீ. இடைவெளியுள்ள சிறு தகரக் குழாயை ஒரு
சென்டி
மீட்டர் நீளம் வெளியே வரும்படி வைத்துவிட
வேண்டும்.
பிறகு இந்த இரண்டு புனல்களையும் ஒவ்வொரு
தகரக்
குழாயிலும் உள்ளே செலுத்தி, மேல் மட்டத்திலிருந்து

ஆறு செ. மீ. இறக்கி புனலின் ஓரத்தை குழாயுடன் சேர்த்து பற்ற வைத்து விடவேண்டும். சிறு குழாய்

வைத்து
பற்ற வைத்த புனலை மட்டும் ஓரம் பற்ற வைக்கும்
பொழுது கவனமாக தண்ணீர் கசியாத அளவிற்கு
பற்ற
வைக்க வேண்டும். இந்த வேலை முடிந்த பின் இந்த
இரண்டு தகரக் குழாய்களில் புனலுக்குப் பெரிய
துவாரம்
செய்யப்பட்ட குழாய்க்கு ஒரு மூடி தயாரிக்க
வேண்டும்.
இந்த மூடி சரளமாக திறக்கவும் மூடவும் கூடியதாக
இருக்க வேண்டும். மெல்லிய குழாய் பற்ற வைத்த
புனலுடன் கூடிய தகரக் குழாயின் மூடி வேறுவிதமாக
இருக்க
வேண்டும். அதாவது இந்தக் குழாயின் மேல்
மட்டத்திற்கு
ஏற்ற அளவில் ஒரு தகர வட்டவில்லை வெட்டி
அதை
மட்டமாகத் தட்டி அதன் நடு பாகத்தில் முக்கால்
சென்டி
மீட்டர் அகலத்தில் ஒரு வட்டமான துளை போட்டு
விட்டு,
அந்த வில்லையை குழாயின் மேல் மட்டத்தில்
வைத்து,
சுற்றிலும் தண்ணீர் கசியாத அளவில் ஈயம் கொண்டு
பற்ற
வைத்துவிட வேண்டும்.
இவைகளைத் தயாரித்தபின் இவைகள் சரிவர
வேலை

செய்கின்றனவா என்பதை பரிசோதனை செய்து
குற்றங் குறை இருப்பதாகத் தெரிந்தால் அதைச்
சரிபடுத்திக்
கொள்ள வேண்டும்.

அதாவது, ஆங்கில மருந்து கடைகளில் ABSORBENT
COTTON அப்சார்பெண்ட் காட்டன் அதாவது நீரை
இழுக்கும் வெண்ணிறப்பஞ்சு என்று கேட்டால்
கொடுப்பார்கள். அதை தேவையான அளவு வாங்கி
வந்து புனலில்
பெரிய துளையுள்ள குழாயை எடுத்து, புனல்
துளையில்
இலேசாகப் போகக்கூடிய அளவில் ஒரு நீண்ட
திரியை
தயார் செய்து குழாய்க்கு அதாவது கண்ணாடி
டம்ளரை
ஒரு கட்டையின் மேல் வைத்தால் அது எந்த
அளவில்
நிற்குமோ அந்த அளவில் கண்ணாடி டம்ளர் அடி
மட்டம்



வரை தொங்கும்படி வைத்துவிட்டு மீதமுள்ள திரியை
புனலில் நிறைய சுருட்டி வைத்துவிட வேண்டும்.
மேலும்
இடம் இருந்தால் இந்த பஞ்சைக் கொண்டே நிரப்பி
மூடியை மட்டமாக வைத்து மூடிவிட வேண்டும்.

தகரக் குழாயினுள் சரளமாக போகக் கூடிய இரண்டு
வட்டமான மரக்கட்டைகள் தேவைப்படும். இவைகள்
மூன்று செ. மீ. உயரம் உள்ளவைகளாக

இருக்கவேண்டும்.
ஒரு மரக்கட்டையை வைத்து அதில் நிறைய சுத்தமான
தண்ணீரை விட்டு, ஒரு வட்டக் கட்டையின் மேல் வைத்து
பஞ்சு வைக்கப்பட்ட குழாயை எடுத்து மேலிருந்து கீழாக
வைத்து டம்ளரை மூடிவிட வேண்டும்.
சிறிது நேரம் கழித்து குழாயை எடுத்துவிட்டு
கண்ணாடி டம்ளரைப் பார்த்தால் அதிலுள்ள தண்ணீரை
பஞ்சு உறிஞ்சி விட்டிருக்கும். கண்ணாடி டம்ளர் காலியாக
இருக்கும். இது போல இரண்டு மூன்று முறை
செய்து பார்க்க வேண்டும். ஆனால் ஒவ்வொரு முறையும்
தண்ணீர் குடித்த பஞ்சை எடுத்துவிட வேண்டும்.
வேறு புதிய பஞ்சை அடைக்க வேண்டும். பழைய
பஞ்சைப் பிழிந்து, காய வைத்து பழையபடியும்
பயன்படுத்த முயற்சி செய்யக் கூடாது. பழைய பஞ்சு மறுபடி
தண்ணீரை அவ்வளவாக உறிஞ்சி எடுக்காது. இந்தப்
பரிசோதனையில் நல்ல முறையில் வேலை செய்கிறது
என்று அறிந்த பின் இதை வைத்துவிட வேண்டும். சிறிய
குழல் வைத்த குழாயை எடுத்து மேல் மூடியிலுள்ள சிறு
துளையில் ஒரு சிறு புனலை வைத்து, குழாயினுள்

இடது
கையை விட்டு ஆள்காட்டி விரலினால் சிறு
குழாயின்
வாயை அழுத்தி அடைத்துக் கொண்டு சிறு புனலில்
ஒரு
டம்ளர் அளவு தண்ணீரை விட்டு நிறைந்தவுடன்
புனலை
எடுத்து விட்டு, அந்த இடத்தை சுத்தமாகத் துடைத்து
விட்டு, தேன் மெழுகைக் கொண்டு இரண்டு செ. மீ.
-49-
அகலத்திற்கு அதாவது ஒரு எட்டணா நாணயம்
அகலத்திற்கு அதே அளவு வட்டமாகச் செய்து புனல்
வைத்த
துளையின் மேல் வைத்து மூடி அழுத்தி விட்டு
உள்ளே
விரலினால் அழுத்திப் பிடித்த சிறு குழாயை
விட்டுவிட
வேண்டும். இந்த சமயம் அந்தக் குழாயில் தண்ணீர்
வருகிறதா என்று கவனிக்க வேண்டும். சிறு குழாயின்
நுனியில் தண்ணீர் வரக் கூடாது.
ஒரு வட்ட மரக்கட்டையை வைத்து அதன் மேல்
ஒரு
கண்ணாடி டம்ளரை வைத்து இந்தத் தண்ணீர்
நிரப்பப்பட்ட குழாயை அதன் மேல் கவிழ்த்து
வைத்து மேலே
உள்ள மெழுகை எடுத்து விடவேண்டும், சிறிது
நேரம்
கழித்துப் பார்த்தால் புனலில் அடைத்த தண்ணீர்

முழுவதும் கண்ணாடி டம்ளரில் இறங்கி இருக்கும். அப்படி
தண்ணீர் இறங்காமலிருந்தால் காரணத்தை அறிந்து நிவர்த்தி செய்ய வேண்டும்.

இந்தப் பரிசோதனை வெற்றிகரமாக முடிந்து விட்டால்
இவைகளை காட்சியின் போது பயன்படுத்த தகுதியானது
என்று தீர்மானிக்க வேண்டும்.

இந்தக் காட்சியை ஆரம்பிக்கு முன் பெரிய துளையுள்ள தகரக் குழாயின் உள்ளே முன் சொன்னது போல
புதிய பஞ்சியை புனலிலிருந்து திரி போல நீளமாகக் கண்ணாடி டம்ளர் அடிவரை தொங்கும்படி வைத்து அதை
ஒரு தட்டில் வைத்து, பக்கத்தில் ஒரு கண்ணாடி டம்ளரில்
கொஞ்சம் குறைய ஆரஞ்சு அல்லது சிவந்த நிறமான உண்மையான சர்பத்தை விட்டு வைத்து விடவேண்டும்.

இரண்டாவதாக சிறிய குழாய் அமைத்த தகரக் குழாயை எடுத்து முன்போல இடது கை ஆள் காட்டி விரலைத் தகரக் குழாய்க்குள் விட்டு சிறிய குழாயின் முனையிலுள்ள துவாரத்தை அழுத்திப் பிடித்துக்



கொண்டு சிறிய புனலை மூடியிலுள்ள துளையில் வைத்து
முதல் டம்ளரில் ஊற்றி வைக்கப்பட்ட அதே

அளவில்
அது போன்ற அதே சர்பத்தை விட்டு புனலை
எடுத்து
விட்டு, அந்த இடத்தை சுத்தமாகத் துடைத்து மெழுகு
வில்லையை வைத்து அழுத்தி மூடி, உள்ளே
அடைத்திருக்கும் விரலை எடுத்து விட்டு சிறு
குழாயில்
சர்பத்வெளியேறுகிறதா என்பதை கவனித்து அதை
ஒரு
தட்டில் வைத்து அதன் பக்கத்தில் மற்றொரு
கண்ணாடி
டம்ளரை வைத்து, மேடையின் முன்பக்கமாக இடது
வலது பக்கத்தில் இரண்டு ஸ்டூல்களைப் போட்டு
அதன்
மேல் டம்ளர் தகரக் குழாய் வைக்கப்பட்ட இரண்டு
தட்டுகளையும் இரண்டு ஸ்டூல்களின் மேலும் வைத்து
விட
வேண்டும்.

ஒவ்வொரு கண்ணாடி டம்ளரையும் ஒவ்வொரு
வட்டமான கட்டையின் மேல் வைக்க வேண்டும்.
இதை
மறந்து விடக்கூடாது.

காட்சி நடத்துகிறவர் மேஜைக்கு வந்து "இதோ
பாருங்கள். இந்த டம்ளரில் உள்ள சர்பத் அந்த
டம்ளரில்
வரவேண்டும். பாருங்கள்" என்று சொல்லி, சர்பத்
உள்ள கண்ணாடி டம்ளரை மேலே தூக்கி
சபையோருக்குக்

காண்பித்து விட்டு, மறுபடி அதே இடத்தில் டம்ளரை வைத்து விட்டு, காலி டம்ளரை எடுத்து
சபையோருக்குக்
காண்பித்து அதை அதே இடத்தில் வைத்து விடவேண்டும்.

பிறகு, முதல் ஸ்டூல் பக்கத்தில் வந்து டம்ளர் பக்கத்திலுள்ள தகரக் குழாயை எடுத்து டம்ளரின் மேல்
கவிழ்த்து விட்டு நைசாக அதன் மேல் ஒட்டப் பட்டிருக்கும் மெழுகு வில்லையை எடுத்து விட வேண்டும்.

பிறகு கறுப்புக் கைக் குட்டையை எடுத்து அதன்மேல் மூடிவிட வேண்டும். பிறகு இரண்டாவது ஸ்டூல் அருகில்
சென்று தகரக் குழாயை எடுத்து சர்பத் உள்ள டம்ளரின்



மேல் பக்கமாக வைத்து சர்பத் டம்ளரை மூடிவிட வேண்டும். பிறகு கறுப்புக் கைக்குட்டையைக் கொண்டு
தகரக் குழாயை மூடிவிட வேண்டும்.

அதன்பின் மந்திரக் கோலை எடுத்து சர்பத் உள்ள டம்ளரிலிருக்கும் சர்பத்தை காலி டம்ளரில் விடுவது போல பாவனை காட்டி, சர்பத்தை மூடிய தகரக் குழாயை
மெதுவாக எடுத்தால் அந்த டம்ளரில் உள்ள சர்பத் காணாமல் போய் கிளாஸ் காலியாக இருக்கும். அதை எடுத்து சபையோருக்குக் காண்பித்து விட்டு, வெறும்

டம்ளர் வைத்து மூடப்பட்ட தகரக் குழாயின் மேல்
மூடப்பட்ட கறுப்புக் கைக்குட்டையை எடுத்து விட்டு,
தகரக் குழாயைத் திறந்து பார்க்க அதில்
நிறைந்திருக்கும்.
இதை சபையோருக்கு எடுத்துக் காண்பித்து விட்டு,
அதன்
இடத்தில் வைத்துவிட வேண்டும். இதைக் கண்ட
சபையோர் ஆச்சரியப்படுவார்கள். இந்தக் காட்சியை
இதோடு முடித்து விடவேண்டும்.

குறிப்பு : இந்தக் காட்சியை நடத்துகிறவர் ஒரு மணி
நேரத்திற்கு முன்னதாகவே இந்த பொருள்கள் காட்சி
நடத்த பயன்படக் கூடிய அளவில் தயாராக
இஇருக்கின்றனவா என்று சோதனை செய்து பார்த்துக்
கொள்ள
வேண்டும். எக்காரணம் கொண்டும், தகரக் குழாயின்
அடிபாகம் சபையோருக்கு தெரியாத அளவில்
கையாள
வேண்டும்.

மோதிரம் காணாமல் போய்
பார்சலிலுள்ள சிறிய டப்பாவில்
வருதல்

இதற்கு சூட்சும மரப்பெட்டி, சூட்சும சிறிய தகர
டப்பி இரண்டும் தேவைப்படும்.

-52-

சுமார் 12. செ.மீ. நீளம். 7 செ.மீ அகலம். 4 செ.மீ.
உயரம் உள்ள ஒரு சிறிய மரப்பெட்டி தயாரிக்க
வேண்டும். 1 செ. மீ. கனமுள்ள நல்ல பலகையில்
தான்

இந்தப் பெட்டியைத் தயாரிக்க வேண்டும். இந்தப் பெட்டியின் உயரத்தில் இரண்டு பங்களவு அடிபாகமாகவும், ஒரு
பங்களவு மூடியாகவும் வைத்து தயாரித்து மூடிக்கு இரண்டு
கீல் வைத்து இணைத்து, பெட்டியை மூடவும் திறக்கவும்
கூடிய அளவில் இருக்க வேண்டும்.

மூடியின் முன்பக்கம் சிறிய பூட்டு போடுவதற்கு ஏற்ற
முறையில் சிறிய "பாட்லாக்" இணைத்திருக்க வேண்டும்.

இப்படி தயாரிக்கும் பெட்டியில் ஒரு சூட்சுமத்தையும் செய்ய வேண்டும். அதாவது இந்த பெட்டியின் அடிப்பலகை பெட்டியின் உள்பக்க அளவிற்கு இருக்க வேண்டும்.

இந்த அடிப்பலகையின் நீளவசத்தில் ஒரு பக்கத்தை அழுத்தினால் மறுபக்கம் மேலே தூக்கி இடைவெளி தோன்ற வேண்டும். அதாவது பெட்டியின் உள்ளே வைக்கப்பட்ட பொருளை எடுக்க அடிப்பலகையை அழுத்தினால் அது கீழ்ப்பக்கமாக வெளியே வந்துவிட வேண்டும்.

மறுபடி பலகையை அழுத்தினால் அது மட்டமாகப் படிந்து விடவேண்டும். இந்த முறையில் இந்தப் பெட்டியைத்
தயாரிக்க வேண்டும்.

இந்தப் பெட்டிக்கு ஏற்ற அளவில் அழகிய சிறிய பூட்டும் சாவியும் வாங்கி வைத்துக் கொள்ள

வேண்டும்.
 பிறகு சுமார் 4. செ. மீ. நீளம் 3.செ. மீ. அகலம் வைத்து 2 1/2 சென்டிமீட்டர் உயரம் வைத்து ஒரு சிறு அழகிய தகர டப்பி தயார் செய்ய வேண்டும்.
 இதற்கு ஒரு சொருகு மூடியும் தயார் செய்து கொள்ள வேண்டும். ஆனால் இதிலும் ஒரு சூட்சுமம் செய்ய வேண்டும். அதாவது இந்த டப்பியின் உள்பக்கம்
சமபாதி அளவில் ஒரு தகரத் தகடு வைத்து பற்ற வைத்து

விட வேண்டும். அடிப்பக்கமாக ஒரு பித் ளை மோதிரத்தைப் போட்டு பிறகுதான் அடித்தகடு பற்ற வைக்க
வேண்டும். இப்படி தயார் செய்த டப்பியை கையில் எடுத்து ஆட்டினால் உள்ளேயுள்ள பித் ளை மோதிரம்
"கட கட"வென்று ஆட வேண்டும். அந்த அளவிற்கு இந்த
தகரடப்பியைத் தயார் செய்ய வேண்டும்.
 பிறகு இந்த டப்பியின் மேல் காகிதத்தை நாலைந்து சுற்று சுற்றி அதன் மேல் "டுவைன்" நூலைக் கொண்டு பல சுற்று சுற்றி மூடி போட்டு, விட வேண்டும். பிறகு பச்சை
நிறமான ஒருதுணியை எடுத்து அதை சுமார் 5 செ.மீ. அகலம்
வைத்து, நான்கு மீட்டர் நீளத்திற்கு ஒரே நீளமான ரிப்பன்

போல வெட்டி அதையும் இந்த டப்பிப் பார்சலின் மேல்
அழுத்தமாக ஆழமாகச் சுற்றிவிட வேண்டும். பிறகு அதன்
மேல் பல காகிதங்களைச் சுற்றி பழையபடி டுவைன் நூலைக் கொண்டு பல சுற்றுகள் சுற்றி முடிந்து விட்டு, பழையபடி பல காகிதங்களை அதன் மேல் சுற்றி கடைசியாக பிரவுன் பேப்பரைச் சுற்றி அதை ஒரு தபால் பார்சல்
போலச் செய்து, மேலே டுவைன் நூல் சுற்றி ஆறு இடங்களில்
அழகாகச் சீல் வைத்து, தனியே வைத்துக் கொள்ள வேண்டும்.

இந்தக் காட்சியை ஆரம்பிக்கும் பொழுது மேடையின்
முன்பக்கம் இரண்டு பக்கமும் இரண்டு ஸ்டூல்களைப் போட்டு, ஒவ்வொன்றின் மேலும் ஒவ்வொரு தட்டை வைத்து
விடவேண்டும். மேடையிலிருந்து வலது பக்கமுள்ள ஸ்டூலின்
மேல் உள்ள தட்டில் சீல் வைத்த பார்சலை வைத்துவிட
வேண்டும். இடது பக்கமுள்ள தட்டில் மந்திரப் பெட்டி,
பூட்டு சாவி, இவைகளை வைத்துவிட வேண்டும்.

காட்சியை நடத்துகிறவர்கள் மேடைக்கு வந்து, மந்திரப்
பெட்டியை எடுத்துத் திறந்து சபையோருக்குக்

காண்பித்து
உள்ளே ஒன்றும் இல்லை என்பதை தெளிவு
படுத்திவிட

வேண்டும். பிறகு, பெட்டியையும் பூட்டு சாவியையும்
கையில் எடுத்துப் போய் சபையில் உள்ள
யாரிடமாவது கல்
வைக்காத தங்க அல்லது வெள்ளி மோதிரம்
ஒன்றைக்
கே ட்க வேண்டும். எப்படியாவது பேசி ஒரு
மோதிரத்தை
வாங்க வேண்டும். இந்த மோதிரம் கொடுத்தவரைக்
கொண்டே பெட்டியில் வைக்கச் சொல்லி அவரையே
மூடி
அதைப் பூட்டி சாவியை வைத்துக் கொள்ளும்படிச்
செய்து
விடவேண்டும்.
இந்த வேலை முடிந்தபின் இரண்டு கைகளினாலும்
பெட்டியைப் பிடித்து மேடைக்குக் கொண்டு வரும்
பொழுது
பெட்டியின் அடிபாகத்தின் ஒரு ஓரத்தை
அழுத்தினால்
மறுபக்கம் திறக் கும். இதன் வழியாக மோதிரத்தை
கைக்கு
வரவழைத்துக் கொண்டு மறுபக்கம் அழுத்தினால்
அடிபாகம் மட்டமாக மூடிக் கொள்ளும். இந்த
வேலை
வேகமாக நடைபெற வேண்டும். அதே நேரத்தில்

வலது
கையில் மந்திரக்கோல் இருக்க வேண்டும். இந்த
மோதிரத்தை அதே கையில் விழச்செய்து மந்திரக்
கோலுடன் சேர்த்து கையில் மறைவாக வைத்துக்
கொள்ள
வேண்டும்.
பெட்டியுடன் மேடைக்குச் சென்று பெட்டியை
ஸ்டூலின்
மேலுள்ள தட்டில் வைத்து விட்டு பார்சலை எடுத்து
சபையோரிடம் காண்பித்து எங்காவது ஓட்டை, துளை
இருக்கிறதா? என்று சோதனைச் செய்யச் சொல்ல
வேண்டும்.
இதை சபையில் பலரிடம் கொடுத்து பரிசோதனை
செய்யச்
சொல்ல வேண்டும். பரிசோதனைக்குப்பின் பார்சலை
வாங்கி வந்து அதை எடுத்த இடத்தில் வைத்துவிட
வேண்டும்.
இரண்டு கறுப்புக் கைக்குட்டையை எடுத்து
சபையோருக்கு முன் உதறிக் காண்பித்து விட்டு ஒரு
கைக்குட்டையினால் பூட்டிய சிறிய பெட்டியை மூடி
விட்டு மற்றொரு
கைக்குட்டையினால் பார்சலை மூடிவிட்டு மந்திரக்
-55-
கோலைக் கொண்டு மந்திரம் போட்டு,
பெட்டியிலிருக்கும்
மோதிரத்தை பார்சலுக்குள் போகச் செய்வது போல
நடித்து
விட்டு, பெட்டியின் மேல் மூடிய கைக்குட்டையை

எடுத்து
விட்டு பெட்டியை ஆட்டினால் சப்தம் இருக்காது.
உடனே
அந்தப் பெட்டியை பூட்டியவரிடம் கொடுத்து
பூட்டைத்
திறக்கச் செய்து பெட்டியில் பார்க்கச் சொன்னால்
பெட்டியில் மோதிரம் இல்லாததைக் கண்டு
ஆச்சரியமும்
பயமும் அடைவார்.
"உங்கள் மோதிரம் கொஞ்ச நேரத்தில் உங்கள்
கைக்கு
வரும்" என் று சொல்லி விட்டு பெட்டியின் பூட்டு
சாவியை
வாங்கி அதை இருந்த இடத்தில் வைத்துவிட
வேண்டும்.
பிறகு பார்சலை எடுத்து அதன் மேல் உள்ள சீலை
உடைத்து நூலை அறுத்து காகிதத்தைப் பிரிக்க
வேண்டும்.
ஒவ்வொரு கட்டையும் பிரித்து காகிதத்தைப் பிரித்துப்
பிரித்து போட வேண்டும். அதன்பின் துணி
சுற்றப்பட்டிருக்கும் பகுதி வரும். அதையும்
மெதுவாக சபையோர்
கவனித்து ரசிக்கும்படி புன்முறுவலோடு பிரிக்க
வேண்டும்.
அதையடுத்து காகிதச் சுற்று வரும். கடைசியாக சிறிய
டப்பி வரும். இந்த டப்பியை எடுக்குமுன்
மோதிரத்தையும் மந்திரக் கோலையும் இடது கைக்கு
மாற்றிக்

கொள்ள வேண்டும்.
சிறிய தகர டப்பியை கையில் எடுத்து அதை பல முறை
ஆட்டி ஒலி எழுப்பி, அந்த டப்பிக்குள் தான் மோதிரம்
இருக்கிறது என்று சபையோர் நம்பும்படிச் செய்து, அந்த
டப்பியை திறந்து மந்திரக் கோலும் மோதிரமும்
வைத்திருக்கும் இடது கையில் டப்பியைக் கவிழ்த்து மோதிரம்
கையில் விழுந்து விட்டது போல் பாவனை செய்து, வலது
கை ஆள்காட்டி விரல் இரண்டையும் கொண்டு
உள்ளங்கையிலுள்ள மோதிரத்தை எடுத்து சபையோரிடம்
-56-
காண்பித்து, அதன் சொந்தக்காரரிடம் கொடுத்து "உங்கள்
மோதிரம்தானா? நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள்."
என்று சொல்லி, அவர் தன் மோதிரம்தான் என்று சொன்ன
பிறகு மேடைக்கு வரவேண்டும். இத்துடன் இந்தக்
காட்சியை முடித்து விடவேண்டும்.
குறிப்பு : பெட்டியில் மோதிரத்தை வைத்துப் பூட்டியபின்,
பெட்டியை மேஜைக்குக் கொண்டு வரும் பொழுது
சபையோருக்கு முதுகைக் காண்பிக்கும் வகையில்
மேடைக்கு வர

வேண்டும். வரும் பொழுதே மந்திரப்பெட்டியின் கீழ்
பகுதியை அழுத்தி மோதிரத்தை மந்திரக் கோல்
பிடித்திருக்கும் கைக்கு எடுத்து அதை சபையோர்
அறியாமல்
மந்திரக் கோலுடன் சேர்த்துப் பிடித்து மறைத்து
வைத்துக்
கொள்ள வேண்டும். அதை தவற விடாமல்
கவனமாக
வைத்துக் கொள்ள வேண்டும். மோதிரத்தை
கைமாற்றும்
பொழுது தவறிவிழாமல் கவனமாக மாற்ற வேண்டும்.

பெட்டியில் மேல் சுற்றப்பட்ட காகிதம், துணி
இவைகளைப் பிரிக்கும் பொழுது புன்முறுவலுடன்
ஆச்சரியத்துடன் செய்ய வேண்டும். சிறிய டப்பியை
ஆட்டிக்
காண்பிக்கும் பொழுது சபையோர் ஆச்சரியப்படும்
விதத்தில்
நடிக்க வேண்டும்.

டப்பியிலிருந்து மோதிரத்தை கீழே உள்ளங்கையில்
கவிழ்க்கும் பொழுது வெகு சாமர்த்தியமாக நடிக்க
வேண்டும்.

முழு ரூபாய் மேலே

கிளம்புதல்

இந்தக் காட்சியை நடத்த பரணில் உதவியாளை
இருக்க செய்ய வேண்டும்.



துணி தைக்கும் உறுதியான நூலில் சுமார் நான்கு
மீட்டர் நீளத்திற்கு நூல் எடுத்து வெயில் படும்

இடத்தில்
இரண்டு குச்சிகளை நூலிருக்கும் நீளத்திற்கு ஊன்றி
நூலின் ஒவ்வொரு முனையும் ஒவ்வொரு
குச்சியிலும்
இறுக்கி, இழுத்துக் கட்டி விட வேண்டும். தொய்வு
இருக்கக் கூடாது. ஒரு சிறிய பாத்திரத்தில் சாதம்
வடித்த தண்ணீரை தேவையான அளவு விட்டு அதில்
கறுப்புச் சாயப் பவுடரை போட்டுக் கலக்கி, அந்தக்
கஞ்சியை கையில் எடுத்துக் கட்டியிருக்கும் நூலின்
தலைப்பிலிருந்து மறுநுனி வரை நன்றாகப் படும் டி
தடவ
வேண்டும். இந்த விதமாக காயக் காய மூன்று
முறைப் பூசி காய வைத்து, சுமார் நான்கு செ. மீ.
நீளம்
ஒரு செ. மீ. கனமுள்ள உருளைக் கட்டையில் சுற்றி
அதன்
கடைசி முனையில், மூன்று முடிச்சுகளை போட்டு,
மிக
கனமுள்ள உயர்ந்த தேன் மெழுகை எடுத்து அதில்
நூல்
முனையில் முடி போட்ட பகுதியை வைத்து நன்றாக
சேர்த்து உருட்டி விட வேண்டும்.
இந்தக் காட்சி ஆரம்பிக்கும்முன் பரணில்
உதவியாளை
ஏறச் சொல்லி மேடையின் முன் பகுதியில்
சபையோர்
காணும் அளவிற்கு ஒரு ஸ்டூலின் மேல் ஒரு சிறிய
முக்காலியை வைத்து, அதற்கு நேராக பரணில் சுமார்

2செ. மீ. துளை போட்டு, அதற்கு பக்கத்தில், நான்கு செ. மீ. வட்டத்தில் ஒரு துளை போட்டு, அதன் வழியே
உதவியாள் மேலேயிருந்து கீழே பார்க்க வசதிசெய்து வைத்துக் கொண்டு, சிறிய துளையின் வழியே நூலில் ஒட்டிய மெழுகு உருண்டையை விட்டு ஸ்டூலின் மேலுள்ள
முக்காலிக்கு நடுவில் வரும்படி செய்ய வேண்டும்.
இந்த சமயம் அதில் ஒரு ரூபாய் நாணயத்தை மெழுகில் ஒட்டி உதவியாளை மேலே மெதுவாகத் தூக்கச்
சொல்ல வேண்டும். மேடையின் உயரத்திற்குத் தூக்கக்
கூடாது. ஸ்டூலுள்ள முக்காலியிலிருந்து 60செ. மீ. உயரம்

வரைதான் தூக்க வேண்டும். பிறகு கீழே இறக்கிவிட வேண்டும். முதலில் இதை பரீட்சார்த்தமாக பலமுறை செய்து பார்த்துக் கொள்ள வேண்டும். ஸ்டூலை எடுத்து
விட்டு மேடையில் மட்டமான பகுதியில் ஸ்டூல் வைக்க
வேண்டிய இடத்தில் சாக்பீஸ் கொண்டு அடையாளம் செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.
இந்தக் காட்சியைத் தொடங்குமுன் உதவியாளரைப் பரணில் ஏறச் செய்து, மெழுகு உருட்டப்பட்ட நூலையும்
கையில் கொண்டு போகும்படிச் செய்துவிட்டு ஒரு

ரூபாய்
நாணயத்தைக் கையில் வைத்துக் கொண்டு
சபையோருக்கு
முன் ஸ்டூலைப் போட்டு முக்காலியை வைத்து அதன்
மேல்
ஒரு கறுப்புக் கைக்குட்டையை விரித்துப் போட்டு,
அதன்
மேல் ஒரு ரூபாய் நாணயத்தை வைக்க வேண்டும்.
இந்த
சமயம் மேலே உள்ள உதவியாள் மெழுகு
உருண்டையை
மெதுமெதுவாகக் கீழே இறக்க வேண்டும். மெழுகு
உருண்டை முக்காலிக்கு நேராக வந்து, முக்காலிக்கு
மேலுள்ள கைக்குட்டையில் படுக்கும்படி
இறக்கிவிட்டு
நூலை தளரவிடாமல் அப்படியே பிடித்துக் கொள்ள
வேண்டும்.

பிறகு காட்சி நடத்துகிறவர் ஒரு ரூபாய் நாணயத்தை
கையில் எடுத்து சபையோரிடம் காண்பித்து "இதோ
பாருங்கள்! இது அசல் ரூபாய் நாணயமா என்று
பாருங்கள்!" என்று சொல்லி பலரிடம்
காண்பித்துவிட்டு
மேடைக்குக் கொண்டுவந்து சபையோர் காண
முக்காலியின் மேல் வைப்பது போல பாவனை
செய்துகொண்டே
மெழுகு உருண்டையை எடுத்து, ரூபாயில் மட்டமான
பகுதியில் சற்று இடம்விட்டு ஓரமாக நன்றாக
அழுத்தி

விட்டு, அதை சற்று தூரம் கையில் எடுத்து வந்து சபையோரிடம் காண்பித்துவிட்டு மறுபடி முக்காலி மேல்
வைத்துவிட்டு தூரமாக வந்துவிட வேண்டும்.
-59-
கையில் மந்திரக் கோலை பிடித்து "ஓ! சக்தியும் மதிப்பிற்கும் உரிய ரூபாய் நாணயமே! நீ சற்று உயரப் பறந்து காண்பி பார்க்கலாம்" என்று சொல்லி ஒன்று, இரண்டு, மூன்று என்று சொன்னவுடன் மேலே இருக்கும்
உதவியாள் நூலை மெதுமெதுவாக மேலே இழுக்க வேண்டும். வேகமாக இழுக்கக் கூடாது. தேவையான உயரம் உயர்ந்தவுடன் காட்சி நடத்துகிறவர் "பஸ்! போதும்! மெதுவாக கீழே இறங்கு" என்று சொன்னவுடன் உதவியாள் நூலை மெதுமெதுவாக இறக்கி
ரூபாயை முக் ாலியின் மேல் இறக்கிவிட வேண்டும். உடனே காட்சி நடத்துகிறவர் முக்காலி அருகே சென்று ரூபாயை எடுக்கும் பொழுதே தந்திரமாக அதில் ஒட்டியிருக்கும் மெழுகைப் பெயர்தது விட்டு ரூபாயைக் கொண்டு வந்து சபையோரிடம் காண்பித்துவிட்டு ரூபாயை நடுவிலுள்ள மேஜையின் மேல்
வைத்துவிட வேண்டும். வேறு காட்சி ஆரம்பிக்க வேண்டும்.

குறிப்பு : தையல் நூலைக் கறுப்புச் சாயம் பூசி அதை பயன்படுத்தினால், அதன் அடியில் தொங்கும் பளு காரணமாக அந்த நூலின் முறுக்கு பிரிய நூல் சுற்றும்.

இதே
சமயம் அதில் தொங்கும் ரூபாயும் சுழலும். இதைக்
காணும் சபையோர் ரூபாய் நூலில்
கட்டப்பட்டிருக்கிறது
என்று சந்தேகப்படுவார்கள்.

நூலில் கஞ்சியை பூசிவிட் டால் நூல் முறுக்கு சுற் ற
முடியாது. அது இரும்புக் கம்பி போல விறைப்பாக
நிற்கும்.
ரூபாய் நாணயம் சுழலாது.

ரூபாயில் மெழுகு உருண்டையை ஒட்டுவதையும்,
எடுப்பதையும் சபையோர் அறிய முடியாதபடி
தந்திரமாகச் செய்ய வேண்டும்.

-60-

எலுமிச்சம் பழத்தை
அறுத்தால் இரத்தம்
சிந்தும் காட்சி

இந்தக் காட்சியை நடத்துமுன் ஒரு கூர்மையான
மேஜைக் கத்தியை எடுத்து சுத்தமாகத்
துடைத்துவிட்டு
சிறிதளவு சாதம் வடித்த கஞ்சியை எடுத்து இரத்தம்
போன்ற சாயப்பொடியைப் போட்டு கரைத்து
துணியில்
வடிகட்டி, கத்தியின் மேல் இருபுறமும் பூசி நன்றாகக்
காயவைத்து விடவேண்டும். இதை வெய்யலில் காய
வைக்க
வேண்டும். நன்றாகக் காய்ந்தபின் மறுமுறையும் பூசிக்
காய
விடவேண்டும். இந்த விதமாக மூன்றுமுறை பூசிக்

காய
வைத்துக் கொள்ளவேண்டும்.
மேடையில் இரண்டு ஸ்டூல்களை ஒரு மீட்டர் இடை வெளிக்கு ஒன்றாகப் போட்டுவிட வேண்டும். அதன் மேல்
ஸ்டூலுக்கு ஒரு கறுப்புக் கைக்குட்டை வீதம் இரண்டு கைக்குட்டைகளை விட்டு, ஒரு தட்டில் நன்றாகப் பழுத்த
ஒரு எலுமிச்சம் பழத்தையும் மற்றொரு தட்டில் சாயம் பூசப்பட்ட கத்தியையும் வைத்து, இரண்டு ஸ்டூல்களின்
மீதும் வைத்துவிட வேண்டும்.

காட்சி ஆரம்பித்தவுடன் எலுமிச்சம் பழத்தை எடுத்து,
சபையோரிடம் காண்பித்து பரிசோதனை செய்யச் சொல்லி மேடைக்குக் கொண்டு வந்து அந்த எலுமிச்சம்
பழத்திற்கு மந்திரம் போடுவது போல மந்திரக்கோலைச்
சுற்றி மொன மொனத்து, இடது கையில் எலுமிச்சம் பழத்தைப் பிடித்து வலது கையில் மந்திரக்கோலை எடுத்து
சரசரவென்று எலுமிச்சம் பழத்தை அறுத்தால் இரத்தம்
கசிந்து ஒழுகும், சபையோர் கண்டு ஆச்சரியப் படுவார்.
உடனே கையைக் கழுவிக் கொண்டு மறு காட்சிக்கு ஆயத்தமாக வேண்டும்.

குறிப்பு : எக்காரணம் கொண்டும் சபையோரிடம் சாயம் பூசிய கத்தியைக் காண்பிக்கக் கூடாது.
எலுமிச்சம்
-61-
பழத்தை அறுக்கும் பொழுது பழத்தை இலேசாக அழுத்திப் பிடித்தால், சாறு இரத்தமாக வெளியேறும்.
நெல்லை, நெற்பொரியாகச்
செய்தல்
200 கிராம் நெல்லை எடுத்து கல், தூசு இல்லாமல் சுத்தப்படுத்தி அது கொள்ளும் அளவிற்கு ஒரு சுத்தமான
துணியைக் கைக்குட்டை போலக் கிழித்து, அதில் இந்த
நெல்லைக் கொட்டி, ஒரு சிறிய மூட்டையாகக் கட்டி அதைச் சுண்ணாம்புச் சூளை இருக்குமிடத்திற்குக் கொண்டு போக வேண்டும். சுண்ணாம்புச் சூளை வைப்பவரிடம் விபரம் சொல்லி அனுமதி பெற்று சுண்ணாம்புச் சூளையை அணுகி, சூளையின் உட்பக்கம்
மையமாகப் பார்த்தால் சாம்பல் மேடாக இருக்கும். இதன் நடுவில் நெல் மூட்டை கொள்ளும் அளவிற்கு ஒரு
குழி தோண்டி இந்த நெல் மூட்டையை வைத்து புதைத்து
விட வேண்டும். நெல் மூட் டைக்கு மேல் மூன்று விரற்கடையளவிற்கு சாம்பல் இருக்க வேண்டும். இப்படிச்
செய்தபின் சுண்ணாம்புச் சூளை வாப்பவர்

சுண்ணாம்புச்
சூளை வைப்பார். சுண்ணாம்பு வெந்தபின் சரியான அளவு ஆறியபின் சுண்ணாம்பை எடுத்து விடுவார்கள்.

கடைசியாக நாம் மூட்டையைப் புதைத்த இடத்தைத் தோண்டினால் அதில் நெல் மூட்டை அப்படியே இருக்கும். இந்த மூட்டையை எடுத்துப் பிரித்து அதிலுள்ள
நெல்லை ஒரு சுத்தமான டப்பியில் கொட்டி காற்றுப் புகாமல் மூடி ஈரம் படாமல் வைத்துக் கொள்ள வேண்டும்.

காட்சி நடத்தும் அன்று காலையில் நெல் மூட்டையை குளையிலிருந்து கொண்டு வந்து மாலைக் காட்சியில் பயன்படுத்த வேண்டும். நெல் ஆறிவிட்டால் காட்சிக்குப்
பயன்படாது.

இந்த காட்சியை ஆரம்பிக்கும் முன் மேடையில் இரண்டு பக்கமும் இரண்டு ஸ்டூல்களைப் போட்டு,



இரண்டிற்கும் இரண்டு கைக்குட்டைகளை விரித்து, ஒரு
தட்டில் நெல் உள்ள டப்பாவையும், மற்றொரு ஸ்டூலில்,
ஒரு முறத்தையும் வைத்துவிட வேண்டும்.

காட்சியை ஆரம்பிக்கும் பொழுது காட்சி நடத்துகிறவர் நெல் டப்பாவை எடுத்துத் திறந்து, முறத்தில்
கொட்டி சபையோருக்குக் காண்பித்து ஒரு ஸ்டூலை

சபையோருக்கு முன் போட்டு அதன் மேல் முறத்தை வைத்து,
மந்திரக் கோலினால் மந்திரம் போடுவது போல பாவனை செய்து உதவியாளரை செம்பில் தண்ணீர் கொண்டு வரச் சொல்லி சற்று விலகி நின்று நெல்லின் மேல் தண்ணீரைத் தெளித்தால் நெல் படபடவென்று வெண்ணிற பொரியாக முறத்திலும், முறத்திலிருந்து பொரிகள் சிதறி கீழேயும் விழும். பொரிந்தது போக பாக்கியுள்ள நெல்லின் மேல் மறுபடி தண்ணீர் தெளித்தால்
அவைகளும் பொரியாகப் பொரியும். இதைக்கண்ட சபையோர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

குறிப்பு : சூளையில் வைத்த நெல்லை பனிரெண்டு மணி நேரத்திற்கு மேல் வைத்திருந்தால் அது பயன்படாது. இந்த 12 மணி நேரமும் அதன் மேல் குளிர்
காற்று படாமல் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். இந்த காட்சியை வேகமாகச் செய்து முடிக்க வேண்டும்.
நெல் காற்றில் ஆறிவிடக் கூடாது. இந்த நெற்பொரியை
எவரும் சாப்பிடலாம். கேடொன்றும் ஏற்படாது.

கண்ணாடி டம்ளர்
விளிம்பில் சிகரேட்டை
நிற்க வைத்தல்

பெரிய கனமான கண்ணாடி டம்ளர் இரண்டு வாங்கி வந்து, ஒரு கண்ணாடி டம்ளரை மட்டும் எடுத்து அதன்

கனத்தை விளிம்பில் துடைப்பக்குச்சி உள்ளே
செல்லும்
அளவிற்கு சுமார் ஒரு செண்டிமீட்டர் அளவு
ஆழத்திற்கு
-63-
துளையிட்டு வைத்துக்கொண்டு ஒரு மெல்லிய
தையல்
ஊசியை எடுத்து அதன் கூர்ப்பகுதியிலிருந்து
இரண்டு
செ.மீ. நீளம் வைத்து உடைத்து வைத்துக் கொண்டு
ரோசனத்தை தூள் செய்து இந்தத் துளையில் நிறைய
செலுத்தி அந்தப் பகுதியை நெருப்பின் மேல்
காண்பித்தால் ரோசனம் உருகி துளையில் நீர் போல
நிற்கும். இந்த
சமயம் உடைத்து வைத்திருக்கும் ஊசி முனையை
எடுத்து
கூர்ப்பகுதியை மேல் பக்கமாகவும் க ூர் இல்லாத
பகுதியை
உருகிய ரோசனத்தினுள் ஒரே நட்டக் குத்தலாக
வைத்துப் பிடித்துக் கொண்டிருந்தால் ரோசனம்
இறுகிய
பின் ஊசி விளிம்பில் கெட்டியாக பற்றிக் கொள்ளும்.
ரோசனம் வெளியே பிதுங்கி இருந்தால் அதைச்
சுரண்டி
எடுத்துவிட வேண்டும். பிறகு இதை தனியே
வைத்துக்
கொள்ள வேண்டும்.
இந்தக் காட்சியை ஆரம்பிக்கு முன் ஊசி பதித் த

டம்ளரையும் ஊசி பதிக்காத டம்ளரையும்
மேஜையின்
மேல் வைத்து விடவேண்டும். காட்சி நடத்துகிறவர்
ஊசி
வைக்காத டம்ளரைக் கையில் எடுத்து சபையோரிடம்
காண்பித்து அதில் பசை ஏதும் தடவப்பட்டிருக்கிறதா
என்று பார்க்கும்படி செய்து அந்த டம்ளரை கையில்
எடுத்துக் கொண்டு மேடைக்கு வந்து கையில்
வைத்திருக்கும் டம்ளரை மேஜை மேல் வைத்து
விட்டு ஓரத்தில்
இருக்கும் ஒரு ஸ்டூலை எடுத்து வந்து
சபையோருக்கு
எதிரில் போட்டு விட்டு மேஜையில் வைத்த டம்ளரை
எடுக்காமல் ஊசி பதித்த டம்ளரை கையில் எடுத்து
வந்து
சபையோருக்கு காண்பித்து விட்டு ஸ்டூலின் மேல்
ஒரு
கருப்புக் கைக்குட்டையை விரித்து அதன் மேல்
டம்ளரை
வைத்து மற்றொரு கைக்குட்டையால் அதை மூடி
விட்டு
சபையோரிடம் சென்று யாராவது ஒரு சிகரேட்
கொடுங்களென்று கேட்டால் கொடுப்பார்கள். அதை
கையில்
வாங்கி வந்து, மூடிய டம்ளருக்கு மந்திரம் போடுவது
போல பாவனை செய்து, மூடிய கைக்குட்டையை

எடுத்து விட்டு, கண்ணாடி டம்ளரை எடுத்து

சபையோருக்குக் காண்பித்து சிகரெட்டை எடுத்து
காண்பித்துவிட்டு
சிகரெட்டின் ஒரு முனைப் பகுதியை கூர்மையான
ஊசி
முனையில் வைத்து அதை "பாலன்ஸ்" பிடிப்பது
போல
நடித்து சிகரெட்டை விட்டு விட்டால் அது
அப்படியே
நிற்கும். கண்ணாடி டம்ளரை இலேசாகச் சாய்த்தும், தலைகீழாகத் திருப்பியும் காண்பிக்கலாம். சிகரெட் விழாது. மறுபடி சிகரெட்டை மெதுவாக உருவி எடுத்து, சபையோருக்குக் காண்பித்து விட்டு, மறுபடி சிகரெட்டின் மூன்றில் ஒரு பங்கு நீளம் டம்ளரின் உள்பக்கம் வைத்து மிகுதி மூன்றில் 2 பங்களவை
வெளிப்
பக்கம் வைத்து ஊசியில் சொருகி விட்டால் சிகரெட் அப்படியே நிற்கும். பிறகு எடுத்து விட்டு
சிகரெட்டை
விளிம்பிலிருந்து கீழே விழுவது போல சரிவாக
வைத்து
ஊசியில் சொருகி விட்டால் அப்படியே நிற்கும்.
இதையும்
சபையோருக்குக் காண்பித்து விட்டு காட்சியை
முடித்துவிட
வேண்டும்.

குறிப்பு : இந்தக் காட்சிக்காகத் தயாரிக்கப்பட்ட ஊசி முனை பதித்த கண்ணாடி டம்ளரை கவனமாக பயன்படுத்த வேண்டும். தவறினால் ஊசி முனை

கையில்
பாய்ந்து வேதனை தரும். காட்சிக்குப் பயன்படுத்திய சிகரெட்டை மறுபடி சிகரெட் கொடுத்தவரிடம் கொடுக்கக்
கூடாது. சிகரெட்டை ஊசி முனையில் குத்தும் பொழுது
வெகு எச்சரிக்கையாக குத்த வேண்டும். ஊசி முனையில்
குத்துவதாக சபையோர் எண்ணாதபடி நடந்து கொள்ள
வேண்டும்.

சிகரெட்டில்
நோட்டு வருதல்

எந்த ஒரு சிகரெட்டிலாவது ஒரு சிகரெட் வாங்கி வந்து, அதிலுள்ள புகையிலையை மெதுமெதுவாக



வெளியே எடுத்து விட்டு, புதிய ஒரு ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து அதைச் சிறிய அளவில் மெல்லியதாக
சுருட்டி காலியான சிகரெட்டின் நடுபாகம்வரை செலுத்தி
இரண்டு பக்கமும் காலியாக உள்ள பகுதியில் அதில் எடுத்த புகையிலையை செலுத்தி சிகரெட் போல செய்து
வைத்துக் கொள்ள வேண்டும்.

காட்சி ஆரம்பிக்குமுன் இதை மேஜை மேல் வைத்து
விட வேண்டும். காட்சி நடத்துகிறவர் ஒரு புது

நோட்டை பாக்கெட்டில் வைத்துக் கொண்டு மந்திரப் பெட்டியையும் கையில் எடுத்துக் கொண்டு மேடைக்கு
வந்து மந்திரப் பெட்டியை ஒரு ஸ்டூலின் மேல் வைத்து
விட்டு பாக்கெட்டிலிருந்து ஒரு ரூபாய் நோட்டை எடுத்து
அதை சபையோரிடம் காண்பித்து யாரிடமாவது கொடுத்து,
மந்திரப் பெட்டியில் வைக்கும்படிச் செய்து பெட்டியை
மூடி மேடைக்கு வந்து பெட்டியை மேல் கீழாக மாற்றி
வைத்துவிட வேண்டும். அதன் மேல் ஒரு கறுப்புக் கைக்குட்டையை விரித்து மூடி விட்டு, யாரிடமாவது ஒரு
சிகரெட் இருக்கிறதா? என்று கேட்டு ஒரு சிகரெட்டை வாங்கி வந்து அதை மேஜையின் மேல் வைத்து விட்டு
ஒரு ஸ்டூலைக் கொண்டு வந்து மந்திரப் பெட்டி வைக்கப்பட்ட ஸ்டூலுக்கு சற்றுத் தள்ளிப் போட்டு மேலே கறுப்புக்
கைக்குட்டையை விரித்து மேஜை அருகில் போய் சபையிலுள்ளவரிடம் வாங்கிய சிகரெட்டை எடுக்காமல் உள்ளே
நோட்டு வைக்கப்பட்ட சிகரெட்டை எடுத்து வந்து கறுப்புக் கைக்குட்டையின் மேல் வைத்து மற்றொரு கறுப்புக் கைக்குட்டையினால் மூடி விட்டு, மந்திரப்

பெட்டிக்கும் சிகரெட்டுக்கும் மந்திரம் போட்டு, பெட்டியைத் திறந்து அதில் நோட்டு இல்லை என்பதை
சபையோருக்குக் காண்பித்து விட்டு, பெட்டியை வைத்து
விட்டு கைக்குட்டையை எடுத்து விட்டு சிகரெட்டை எடுத்து இரண்டாக உடைத்து ஒரு ரூபாய் நோட்டை

எடுத்துக் காண்பிக்க சபையோர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

கண்ணாடி டம்ளரில்
காசு போடுதல்

மேடையின் நடுவில் போட்டுள்ள மேஜைக்கு முன் ஒரு
கண்ணாடி டம்ளரை வைத்து மேடையை விட்டு கீழே இறங்கி ஒவ்வொரு காசாக எறிந்தால் அது தவறாமல் கண்ணாடி டம்ளரில் விழ வேண்டும். பத்து பத்துக் காசுகளை எறிந்து அந்தப் பத்துக் காசுகளும் டம்ளரில்
விழுந்ததாக எடுத்துக் காட்ட வேண்டும்.

இந்தக் காட்சியை நடத்த ஒரு வாயகன்ற உலோக பேஸின் ஒன்றை மேடையின் கடைசி கறுப்புத் திரைக்கு
முன் கூழே வைத்து விட வேண் டும். பத்து காசை விட
சற்று கனமான 10 இரும்பு வாஷர்களை வாங்கி வைத்துக்
கொள்ள வேண்டும். உதவியாளை பரணில் ஏறச்

சொல்லி
பேசின் வைத்திருக்கும் இடத்திற்கு நேராக ஒரு துளையிடச் செய்து பத்து இரும்பு வாஷரையும் ஒவ்வொன்றாக
சரியாகப் பேசினில் விழச் செய்து கொள்ள வேண்டும்.
மேலே இருந்து பேசினில் விழும் வாஷர் "டங்" என்ற சப்தத்துடன் விழவேண்டும். அந்த சப்தம் சபையோருக்கும் கேட்க வேண்டும். அந்த அளவில் வேலை
செய்து ஒன்றுக்குப் பல முறை இந்த வேலையை செய்து
சரியாக வருகிறதா என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

20 பத்து காசுகள் தயாரித்து வாத்துக் கொள்ள வேண்டும். இதைப் பத்துப் பத்து காசுகளாக அடுக்கி ஒரு பத்து காசு அடுக்கை மந்திரக் கோலுடன் உள்ளங்கையில் அடக்கிக் கொள்ள வேண்டும். மற்றொரு பத்துக்
காசு அடுக்கை சட்டைப் பையில் போட்டுக் கொள்ள வேண்டும்.



மேஜைக்கு முன் ஒரு ஸ்டூலைப் போட்டு, அதில் ஒரு
கருப்புக் கைக்குட்டையை விரித்து அதன் மேல் ஒரு கண்ணாடி டம்ளரை வைத்துவிட வேண்டும்.

காட்சி நடத்துகிறவர் மேடைக்கு வந்து கண்ணாடி டம்ளரை எடுத்து சபையோரிடம் காண்பித்து விட்டு

டம்ளரை அதனிடத்தில் வைக்கப் போகும் பொழுது மந்திரக் கோலுடன் மறைத்து வைத்திருக்கும் பத்து பத்துக் காசு அடுக்கை சப்தப்படாமல் கண்ணாடி டம்ளரில் போட்டு வைத்துவிட வேண்டும்.

பிறகு ஜேபியிலுள்ள 10 - பத்து காசுகளை எடுத்து சபையோரிடம் காண்பித்து மேடையை விட்டு கீழே இறங்கி கையில் பத்து காசை எடுத்து மேஜையின் முன்
வைக்கப்பட்டிருக்கும் கண்ணாடி டம்ளரில் விழும்படித்
தூக்கிப் போட வேண்டும். இந்த சமயம் "ஒன்" என்று சப்தமாகக் கூறிக் கொண்டே, காசை எறிய வேண்டும்.

அதே நேரத்தில் பரணில் உள்ள உதவியாள் ஒரு வாஷரை பேசினில் போட்டு சப்தம் உண்டாக்க வேண்டும். இதைக் காணும் சபையோர் எறிந்த காசு டம்ளரில் தான் விழுந்திருக்கிறது என்று நினைப்பார்கள்.

ஒவ்வொரு முறையும் காசு எறியும் பொழுது `டூ' - `திரீ' -
`போர்' என்று குரல் கொடுத்து எறிய வேண்டும். அப்போதுதான் பரணிலிருக்கும் உதவியாள் குரலைக் கேட்டவுடன் வாஷரை பேசினில் போட்டு ஒலி உண்டாக்க
வசதியாக இருக்கும். பத்து காசுகளையும் மேடையை நோக்கி
எறிந்த பின், காட்சி நடத்துகிறவர் மேடைக்குச் சென்று

கண்ணாடி டம்ளரை எடுத்து சபையோருக்கு முன்
கையில் கொட்டிக் க ாண்பிக்க வேண்டும். இதைக்
கண்ட
சபையோர்கள் எப்படி குறி தவறாமல் காசுகளை
டம்ளரில் விழச் செய்திருக்கிறார் என்று
ஆச்சரியப்படுவார்கள்.



குறிப்பு : இந்த வேலை புதியதாக செய்பவர்கள்
காட்சிக்கு முன் பலமுறை இந்த வேலையைச் செய்து
பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். காசை எறியும்
பொழுது அது விழும் சப்தம் சரியாக இருக்க
வேண்டும்.
சப்தம் முன் பின்னாக இருந்தால் சபையோர்
சந்தேகப்
படுவார்கள். எனவே, இந்தக் காட்சியை கவனத்தோடு
செய்ய வேண்டும்.

குவளையில் போட்ட
ரூபாய் மறைந்து போதல்

இதற்கு தனிப்பட்ட முறையில் ஒரு தகரக் குழாய்
தயாரிக்க வேண்டும். இது ஒரு படியைப் போல
இருக்க
வேண்டும். சுமார் 15செ. மீ. உயரம் 9 செ. மீட்டர்
குறுக்களவுள்ள படி போன்ற ஒரு குழாய் தயாரித்து
அதன் உள்பக்கமாக புனலின் அரைபாகம் போல
செய்து
அதை குழாயின் விளிம்பிலிருந்து இரண்டு சென்டி
மீட்டர் தள்ளி இதை மட்டமாக வைத்து பற்ற வைக்க
வேண்டும். இந்த அரைப்புனல் பாகத்தின் அகலமான

பகுதி இருக்கும் பக்கம் இந்த குழாயில் மேல் பக்க
வாயை
வட்டமான தகடு வைத்து பற்ற வைத்து
விடவேண்டும்.
இப்போது குழாயின் ஒரு பக்கவாய் திறந்திருக்கும்.
மேஜை மேல் வைத்தால் ஒரு படி போல இருக்கும்.
இப்போது இதனுள் ஒரு பொருளைப் போட்டு,
குழாயை
சரிவாகப் பிடித்து மேல் நோக்கித் தூக்கினால் அந்தப்
பொருள் இந்த புனல் போன்ற பாகத்தில் போய் தங்கி
விடும். குவளையும் தலைகீழாகக் கவிழ்த்தால்
பொருள்
கீழே விழாது. அரைப் புனல் பாகத்தில் தங்கிவிடும்
இப்படிப்பட்ட ஒரு குவளை தயாரித்து
வைத்துக்கொள்ள
வேண்டும்.
மேடையில் இந்தக் காட்சியை ஆரம்பிக்கும்
பொழுது குவளையை கவிழ்த்து சபையோருக்குக்
காண்பித்து
-69-
உள்ளே ஒன்றுமில்லை என்று சொல்லி அதை
ஸ்டூலின் மேல் வைத்து, ஒரு ரூபாயை
சபையோரிடம்
காண்பித்து, எல்லோருக்கும் எதிரில் அந்த ரூபாயை
குவளையில் ஆட்டி ஓசை உண்டாக்கிக் காண்பித்து
விட்டு
மேலே ஒரு கறுப்புக் கைக்குட்டையைப் போட்டு
மூடி,

மந்திரக்கோலை ஆட்டி மந்திரம் போடுவது போல
பாவனை செய்து, குவளையை எடுத்து ரூபாய்
அரைப்
புனல் பாகத்தினுள் போகும்படி நைசாக
குவளையைத்
திருப்பி தலைகீழாகப் பிடித்தால் ரூபாய் அரைப்
புனலுக்குள் மறைந்து விடும். கீழே விழாது. உள்ளே
போட்ட ரூபாய் மறைந்து விட்டதாக சபையோர்
நினைப்பார்கள். மறுபடி குவளையின் மேல்
கைக்குட்டை
மூடி, மந்திரம் போட்டு கைக்குட்டையை எடுத்து
குவளையிலுள்ள ரூபாய் வெளிவரும்படி
குவளையைத் திரும்பிச்
சாய்க்க ரூபாய் வெளியே வரும். சபையோர்
ஆச்சரியப்படுவார்கள்.

சீட்டை ரெயில் டிக்கட்டாக
மாற்றுதல்

மஞ்சள் அட்டையில் அச்சிடப்பட்ட ஒரு ரெயில்
டிக்கட்டைக் கொண்டு வந்து அதை தண்ணீரில்
போட்டு
வைத்தால் அது நன்றாக ஊறிவிடும். பிறகு
அச்சிடப்பட்ட மஞ்சள் தாளை மெதுவாக பெயர்த்து
எடுத்தால் அது
தனியே வந்து விடும். அதை வெய்யலில் காய
வைத்து
எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

சீட்டுக்கட்டில் ஒரு சீட்டை எடுத்து, அதன் நடுவில்
இந்த டிக்கெட் தாளை வைத்து அதே அளவிற்கு

சீட்டை
உள்பக்கமாக மடித்து விடவேண்டும். நான்கு
பக்கமும்
மடித்த பின் ஒவ்வொரு பகுதியிலும், சீட்டின் மடிப்பு
ஒன்றன் மேல் ஒன்றாக மடிந்திருக்கும். அதன் பின்
நடுவில் உள்ள டிக்கெட் அளவுள்ள இடத்தில்
டிக்கெட்

காகிதத்தில் ˙ பசை தடவி அதை சரியான அளவில்
சீட்டின்
மேல் ஒட்டிவிட வேண்டும். பிறகு மடிப்புகளைப்
பிரித்து
விடவேண்டும். இதை மேடையில் மேஜை மேல்
வைத்து
விடவேண்டும்.
இந்தக் காட்சியை காண்பிக்கும் பொழுது சீட்டுக்
கட்டை எடுத்து, அதை நன்றாகக் குலுக்கிவிட்டு ஒரு
சீட்டை எடுப்பது போல ரெயில் டிக்கட் ஒட்டிய
சீட்டை
எடுத்து, சீட்டின் முன் பக்கத்தை சபையோரிடம்
காண்பித்து, அதைக் கையில் பிடித்து வேகமாக
இரண்டு மூன்று
முறை கையை வீசிக்கொண்டே சீட்டை ரெயில்
டிக்கட்
அளவிற்கு மடித்து ரெயில் டிக்கட் ஒட்டிய பகுதியை
டிக்கட் போல கையில் பிடித்துக் காண்பித்து விட்டு
மறுபடி மடிப்புகளைப் பிரித்து முன்பக்கத்தை
சபையோரிடம் காண்பித்து விட்டு சீட்டுக் கட்டுடன்

சேர் த்து விட வேண்டும்.
 இதே போன்ற ஒரு உண்மையான ரெயில்
டிக்கட்டை
வாங்கி, சட்டையின் ஜேபியில் போட்டு வைத்துக்
கொண்டு, சீட்டு ரெயில் டிக்கட்டைக்
காண்பித்தவுடன்
அதை உடனே ஜேபியில் போட்டுக் கொண்டு நல்ல
டிக்கட்டை எடுத்து சபையோரிடம் கொடுத்து பார்க்கச்
சொல்லி மறுபடி, அதை ஜேபியில் போட்டு சீட்டு
டிக்கட்டை எடுத்து கையில் பிடித்து இரண்டு மூன்று
முறை வீசி விட்டு வீசும் நேரத்தில் சீட்டின் மடிப்பை
விரித்து, டிக்கட்டை சீட்டாக மாற்றிக் காண்பித்து
சீட்டில் வைத்து சேர்த்து குலுக்கி வைத்து
விடவேண்டும்.
 கவனிப்பு : இந்தக் காட்சியை நடத்த முன்பழக்கம்
வேண்டும். புதிதாக காட்சி நடத்தக் கூடியவர் இந்தக்
காட்சியை பல முறை செய்து பழக்கத்திற்குக்
கொண்டு
வந்த பின்னரே சபையில் செய்து காண்பிக்க
வேண்டும்.
ஜேபியில் உள்ளே வைத்திருக்கும் நல்ல டிக்கட்டின்
பின்
புறமாக வரும்படி இந்த சீட்டு டிக்கட்டை வைத்து,
-71-
எடுக்கும் பொழுது ஞாபகமாக எடுக்க வேண்டும்.
மறந்து
விடக்கூடாது.
 மூலையைக் கிழித்த

சீட்டை துப்பாக்கியால்
ஒட்டுதல்
இந்தக் காட்சியை நடத்த ஒரு காற்றுத் துப்பாக்கி தேவைப்படும். இதை ஆங்கிலத்தில் AIR-GUN ஏர்கன் என்று சொல்வார்கள். இதில் ஒன்று வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும்.
சீட்டுக் கட்டில் இரண்டு சீட்டுகள் ஒன்றைப் போலவே
உள்ள மற்றொன்றை எடுத்து இந்த இரண்டு சீட்டில் ஒரு சீட்டின் வலது பக்க மேல் மூலையை சுமார் 1 1/2 செ. மீ. அகலம் வைத்து அதை பின்புறமாக மடக்கி
நன்றாக அழுத்திவிட வேண்டும். இது பார்ப்பதற்கு மூலையை வெட்டியது போல தோன்ற வேண்டும். ஆனால்
மடிப்பு பின்புறம் மடிந்து இருக்க வேண்டும். மடிப்பை
நிமிர்த்தினால் முழு சீட்டு போல இருக்க வேண்டும். இந்தவிதமாக ஒரு சீட்டை தயார் செய்து கொள்ள வேண்டும்.
மற்றொரு சீட்டை மூலையை மடக்காமல் கிழிக்காமல்
அப்படியே வைத்துக் கொள்ள வேண்டும். ஒரு சீட்டு டைமண்ட் 5 என்றால் மற்றொரு சீட்டும் டைமண்ட் 5தாகவே இருக்க வேண்டும்.
இந்தக் காட்சி ஆரம்பமாகுமுன் ஒரு சீட்டுக்கட்டை மேஜையின் மேல் வைத்துவிட்டு பக்கத்திலேயே மூலை

மடக்கி விடப்பட்ட சீட்டையும் வைக ்க வேண்டும். மூலை
மடக்கப்பட்ட சீட்டை ஒரு தீப்பெட்டியின் மேல்
வைத்தால் அதைச் சட்டென்று எடுக்க சுலபமாக
இருக்கும்.

-72-

காட்சி நடத்துகிறவர் மேடைக்கு வந்து மேஜை
மேலிருக்கும் சீட்டுக்கட்டை எடுத்து, அதைக் குலுக்கிக்
கலந்து சீட்டுகளை விரித்துப் பிடித்து சபையோருக்குக்
காண்பித்து, அதில் டைமண்ட் 5 என்ற சீட்டை எடுத்து
சபையோருக்குக் காண்பித்து அதன் வலது மேல்
மூலையை 1 1/2 செ. மீட்டர் அளவிற்கு கிழித்து எடுத்து
சபையோருக்குக் காண்பித்து விட்டு அந்த சீட்டையும்
கிழித்த துண்டையும் மேஜையின் மேல் வைத்து விட்டு,
உதவியாளரைக் கூப்பிட்டு துப்பாக்கியை எடுத்து வரச்
சொல்லி, நல்ல சீட்டை மேஜை மேல் வைத்துவிட்டு மூலை
மடித்த சீட்டையும் கிழித்த சிறிய துண்டையும் கையில்
எடுத்து வந்து, மடித்த சீட்டில் மூளியாயிருக்கும் பகுதியை

சபையோரிடம் காண்பித்து, உதவியாளரை
மேடையில்
நடுவில் நிற்க வைத்து இடது கையில் மடித்த
சீட்டைக்
கொடுத்து கட்டை விரலினாலும் மூன்றாவது
விரலையும்
கொண்டு சீட்டைப் பிடித்து சபையோர் பார்க்கும்படி
வைத்துக் கொண்டு, இடதுகை ஆள்காட்டி விரலை
சீட்டுக்குப்பின்னால் வைத்துக் கொள்ளும்படிச்
செய்ய
வேண்டும். இந்தச் சீட்டின் வலது பக்க மேல் மூலை
மூளியாகவே தென்பட வேண்டும்.

காட்சி நடத்துகிறவர் துப்பாக்கியை எடுத்து அதன்
நீண்ட முன்பகுதியிலுள்ள துளையின் சீட்டில் கிழித்த
மூலையைச் சபையோர் காணும்படி போட்டு
மேடையின்
முன்பக்க கீழே இறங்கி சீட்டைக் குறிபார்த்து
ஒன்-டூ-திரீ என்று சொல்லி துப்பாக்கியை வெடிக்கச்
செய்ய வேண்டும். அதே நேரத்தில் சீட்டைப்
பிடித்திருக்கும் உதவியாள் தன் ஆள்காட்டி
விரலினால்
மடித்திருக்கும் மூலையை சட்டென்று மேலே
நிமிர்த்துப்
பிடிக்கவேண்டும். இந்த சமயம் ஆள்காட்டி விரல்
சீட்டுக்கு மேல் வரக்கூடாது.

-73-

இதைக் கண்ட சபையோர் துப்பாக்கி குழாயில்
போட்ட சீட்டின் மூலைதான் பறந்துபோய் ஒட்டிக்

கொண்டது என்று நினைத்து ஆச்சரியப்படுவார்கள்.
குறிப்பு : இந்தக் காட்சியில் உதவியாளர் மிகக் கவனமாக நடக்க வேண்டும். துப்பாக்கியைச் சுடும் பொழுது
மடித்த முனையைத் தூக்காமல் பராக்காக இருந்து விடக்கூடாது.

ரிப்பனில்

முயல் குட்டி வரவழைத்தல்

இந்தக் காட்சியைச் செய்வதற்கு ஒரு முயல் குட்டி தேவைப்படும். அடுத்து 60 செ. மீட்டர் நீளத்தில் இரண்டு செ. மீ. அகலமுள்ள துண்டு ரிப்பன்கள் ஒவ்வொரு கலரிலும் 10-ரிப்பன்கள் வீதம் தேவைப்படும்.
அதாவது பச்சை நிறத்தில் 10-மஞ்சள் நிறத்தில் 10-சிகப்பு நிறத்தில் - 10 - நீல நிறத்தில் - 10 - வெள்ளை
நிறத்தில் -10. இப்படியாக 50 துண்டு ரிப்பன்களையும், பல நிறமாகக் கலந்து கடைசியில் ஒரே தலைப்பாக எல்லாவற்றின் தலைப்புகளையும் ஒன்றாகச் சேர்த்து சவுரி முடிபோல தலைப்புகளை ஒன்றாகச் சேர்த்து உறுதியாகக் கட்டிவிடவேண்டும். இந்தத் தலைப்பைப் பிடித்து உதறினால் எல்லா கீழ் தலைப்புகளும் விரிந்து
சவரிமுடி போல பரவலாக `பம்'மென்று உப்பிக் கொள்ள
வேண்டும். இந்த விதமாக ஒரு ரிப்பன் கட்டுத் தயார் செய்துக்கொள்ள வேண்டும்.

காட்சி ஆரம்பிக்குமுன் மேடையில் ஒரு ஸ்டூலைப்

போட்டு, அதன்மேல் இந்த ரிப்பன் கட்டை
வைத்துவிட
வேண்டும். காட்சி நடத்துகிறவர் மேடைக்கு வந்து
இந்த
ரிப்பன் கட்டை கையில் எடுத்து அதை பலவிதமாக
ஆட்டி
மேலும் கீழுமாக உலுக்கி, உதறி அதன் உள்ளே
ஒன்றும்

இல்லை என்பதை சபையோருக்குக் காண்பித்து
மேடையிலேயே மேடை ஓரத்தை அணுகி ரிப்பனை
உலுக்கிக்
கொண்டே வரவேண்டும். ஒரு சுற்று சுற்றி விட்டு,
இரண்டாவது சுற்றும் வரவேண்டும். மூன்றாவது சுற்று
வரும் பொழுது மேடையின் கடைசியில்
விடப்பட்டிருக்கும் கறுப்புத் திரையின்
நடுப்பாகத்திற்குப் போய்
அதில் செய்யப்பட்டிருக்கும் தந்திர வழிக்கு நேராக
ரிப்பனை அசைத்துக் கொண்டே, திரையிலுள்ள
இடைவெளி வழியே உதவியாள் கொடுக்கும் முயல்
குட்டியை ரிப்பனில் மறைத்து சபையோருக்குத்
தெரியாமல்
அதை ரிப்பன் கட்டோடு மேடைக்கு எதிரே கொண்டு
வந்து பலமாக உதறிக் கொண்டே தரை வரை தாழ்த்தி
முயல் குட்டியை கீழே விட சபையோர்
ஆச்சரியப்படுவார்கள்.

ரிப்பன் கட்டில்
ரூபாய் நோட்டு வரவழைத்தல்

முயல் குட்டி வரவழைக்க பயன்படுத்திய அதே ரிப்பன்
கட்டைக் கொண்டுதான் ரூபாய் நோட்டையும் வரவழைக்க
வேண்டும்.

முதலில் ஒரு 100-ரூபாய் நோட்டை பாங்கிற்குக் கொண்டுபோய் அதை புதிய, ஒரு-ரூபாய் நோட்டுக்கட்டாக
மாற்றி வரவேண்டும். இதை பத்திரமாக வைத்துக்கொள்ள
வேண்டும்.

காட்சி ஆரம்பித்தபின் முயல் வரவழைக்க ரிப்பன் கட்டை எந்த விதமாக குலுக்கி, உதறிக் காண்பிக்கப் பட்டதோ அது போலவே இப்பொழுதும் செய்ய வேண்டும். மேடையின் உள்பக்க ஓரத்தில் ரிப்பன் கட்டை
உதறிக்கொண்டே போய் மூன்றாம் முறை மேடையின்
பின்பகுதியில் தொங்கவிடப் பட்டிருக்கும் கறுப்புத் திரையின் நடுப்பாகத்திற்குப் போய் திரையிலுள்ள



மறைவு வழியாக உதவியாள் வெளியே நீட்டும் ஒரு ரூபாய்
நோட்டுக்கட்டை சபையோர் அறியா வண்ணம் கையில்
வாங்கி, ரிப்பன் கட்டில் மறைத்துக் கொண்டு சபையோர்
முன்வந்து ரிப்பன் கட்டை உதறிக்கொண்டே ஒரு

ரூபாய்
நோட்டுகளை பொலபொலவென்று உதிரச் செய்தால்
சபையோர் கண்டு ஆச்சரியமடைவார்கள்.